# அன்னை ஸைனப் பின்த் ஜஹ்ஷ்

## ரழியல்லாஹு அன்ஹா



அன்னை ஸைனப் பின்த் ஜஹ்ஷ் ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் புனித அடக்கஸ்தலம் - ஜன்னத்துல் பகீஃ, மதீனா

இவர்களின் புனைப் பெயர் உம்முல் ஹகம். குறைஷ் வம்சத்தவர். இவர்களின் அன்னையின் பெயர் உமைமா. கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிபின் குமாரி. நபித்துவத்தின் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாமானவர்.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களால் உரிமையிடப்பட்ட அடிமையும் சுவீகாரப் புத்திரனுமாகிய ஸைத் பின் ஹாரிஸா என்பவருக்கு முதலில் ஹஸ்ரத் ஸைனப் (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டார்கள். இவர்களின் இத்தகைய திருமணமும்

இஸ்லாத்தில் உயர்வு, தாழ்வு என்பது இல்லை என்பது வெறும் பேச்சல்ல என்பதை காட்டும் ஆதாரங்கள் ஒன்றாகும். ஆனால் அவர்களின் சம்பந்தமானது இருவருக்குமிடையில் உண்டான மனஸ்தாபங்கள் காரணமாக ஒரு வருடத்துக்கதிகமாய் நீடிக்கவில்லை. இதன் காரணமாய் ஸைத் (ரலியல்லாஹு அன்ஹு) எத்தனையோ முறை கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களிடம் வந்து, விவாகரத்து செய்துவிட வேண்டுமென்று கூறினார்கள். கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் அடிக்கடி சமாதானம் கூறி அதைத் தடுத்து வந்தார்கள். ஆனால் எவ்விதத்திலும் தம்பதிகளின் உறவு நிலைத்திருக்கவே முடியவில்லை. எனவே, இறுதியாய் 'தலாக்' கொடுத்து விட்டார்கள் ஸைத் (ரலியல்லாஹு அன்ஹு). பின்னர் ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டில் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களே ஹஸ்ரத் ஸைனப் (ரலியல்லாஹு அன்ஹா) வை திருமணம் செய்ய நேர்ந்தது. இத்திருமணத்தால் ஸ்வீகாரப் புத்திரன் சொந்தப் புத்திரனை போல் மதிக்கப்பட்டு வந்ததும், அடிமை, எஜமான் எனும் பாகுபாடும் அழிந்துப்போயின. பெண்கள் பர்தாவுக்குள் அடக்கமாயிருக்க வேண்டுமென்ற கட்டளையும் இது சமயம்தான் பிறந்தது.

இவர்கள் சிறிது குட்டையானவர்கள். அதிக அழகுடையவர்கள். பெரும்பாலும் நோன்பு நோற்பார்கள். இவர்களைப்பற்றி ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்: "ஸைனப் மற்றெல்லாரையும் விட அதிக பக்தியுடையவராகவும், தாராள உள்ளம் படைத்தவராகவும், பேணுதலுடையவராகவும், நேர்மையான வசனமுடையராகவும், கொடையில்

மிக்கவராகவும், அல்லாஹ்வின் பிரியத்தைக் கருதி எதை வேண்டுமானாலும் செய்பவராகவுமே இருந்தார்கள். இவ்விஷயங்களில் இவரைக் காட்டிலும் மேலான ஒரு பெண்மணியை நான் கண்டதில்லை. முன்கோபம் மாத்திரமே இவரிடம் சிறிதுண்டு. எனினும் உடனே அவர் அதையிட்டு வருந்துவார்."

ஹிஜ்ரி 20 ஆம் ஆண்டில் இவர்கள் தங்கள் 53 ஆம் வயதில் காலமானார்கள்.




மேலும் பல இஸ்லாமிய பெரியார்களின் சரிதைகளை, எங்கள் இணையத்தளத்தில் வாசியுங்கள்:

www.mailofislam.com